**செய்தி வெளியீடு எண்.637** **நாள்.8.8.2008**

தமிழ்நாடு மாநில வேலை உறுதி மன்றத்தின் நான்காவது கூட்டம் இன்று (8.8.2008) மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழக அரசின் தலைமைச் செயலர், சிறப்பு செயலர், நிதித்துறை, செயலர், ஊரக வளர்ச்சித் துறை, இயக்குநர், ஊரக வளர்ச்சித் துறை, பாராளுமன்ற உறுப்பினர்கள் திரு.பொ.மோகன், திரு.ஈ.ஜி.சுகவனம், சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர்.கே.காயத்ரிதேவி, திரு.எஸ்.குணசேகரன், திருவாசிமலை, செயல் இயக்குனர், தான் பவுண்டேஷன், திரு.இராஜகோபாலன், செயலாளர், காந்திகிராம் டிரஸ்ட், திண்டுக்கல் மாவட்டம், கன்னியாகுமரி மாவட்ட ஊராட்சித் தலைவர் திருமதி.அஜிதா மனோ தங்கராஜ், கரூர்–பரமத்தி ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி.பி.சரஸ்வதி, திண்டுக்கல்–செட்டிநாயக்கன் ஊராட்சித் தலைவர் திரு.பி.செல்வகணேசன், சேலம்–குட்டப்பட்டி ஊராட்சித் தலைவர் திரு.ஆர்.நாராயணன், கோவை–சின்னியம்பாளையம் ஊராட்சித் தலைவர்திரு.என்.தேவராஜன், விருதுநகர்–டி.கரிசல்குளம் ஊராட்சி தலைவர் திரு.சு.திலகராஜ், விழுப்புரம்–மாத்தூர் ஊராட்சித் தலைவர் திரு.இரா.இராஜன், திருச்சி–திருப்பராய்த்துறை ஊராட்சித் தலைவர் திரு.ஆர்.பாலமணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

கடந்த 3.3.2008 அன்று நடைபெற்ற மூன்றாவது கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் மீதான மேல்நடவடிக்கை குறித்தும், தமிழ்நாடு மாநில வேலை உறுதித் திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களில் நிறைவேற்றப்பட்டுள்ள திட்டப்பணிகள், வழங்கப்பட்டுள்ள வேலை வாய்ப்புகள், திட்ட நிதி பயன்பாடு ஆகியவை குறித்து இக்கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டது.

13.05.2006க்குப் பிறகு இந்த இரண்டாண்டு காலத்தில் இந்த திட்டத்தின் கீழ் இதுவரை 943 கோடியே 51 இலட்சம் ரூபாய் செலவிடப் பட்டுள்ளது என்றும், மொத்தம் 11 கோடியே 79 இலட்சத்து 50 ஆயிரம் மனித வேலை நாட்கள் இந்த இரண்டாண்டு காலத்தில் 31.7.2008 வரை ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும், தலா ரூபாய் 3 இலட்சத்திற்கு குறையாத மதிப்புடைய 11470 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன என்றும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்பு பெறுபவர்களுக்கு குறைந்தபட்ச ஊதியமான ரூபாய் 80ஐ வழங்குவதற்கு ஏதுவாக இத்திட்டத்திற்கென தனியான விலைப்பட்டியலை இந்த அரசு அறிவித்துள்ளது. இதனால், இத்திட்டத்தின் கீழ் தற்போது ஊதியமாக ஒரு நபருக்கு ரூபாய் 80 வீதம் வழங்கப்படுகிறது. மேலும், இத்திட்டத்தின் நிறைவேற்றத்தில் இருந்த பிரச்சனைகளையும், தடைகளையும் அடையாளம் கண்டு அவற்றை களைய அரசு தொடர் முயற்சிகளை மேற்கொண்டது.

இத்திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கு கீழ்க்காணும் சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஊரக விலைப் பட்டியல், ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் குறைந்த அளவு 30 சதவீதம் குடும்பங்களை பதிவு செய்திட வலியுறுத்தல், ஒவ்வொரு பணியின் மதிப்பும் ரூபாய் 3 இலட்சத்திற்கு குறையாமல் இருத்தல், ஒப்பந்ததாரர்கள் தவிர்க்கப்படுதல், ஊராட்சி ஒன்றிய வாகனம் ஒவ்வொன்றுக்கும் மாதம் 50 லிட்டர் கூடுதல் எரிபொருள் வழங்குதல், பிரத்தியேகமாக மாவட்ட, வட்டார மற்றும் கிராம ஊராட்சி நிலையில் 2579 பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு, வேலைஅட்டை, பதிவேடுகள், வருகைப் பட்டியல் ஆகியவற்றை முறைப்படுத்துதல், ஊதிய நிலுவை தொகை பெற தனி நபர்களுக்கு வங்கி கணக்குகள் துவக்குதல், சமூக தணிக்கை, வாராந்திர அறிக்கை, அலுவலர்கள் மூலம் தொடர் ஆய்வு மேற்கொள்ளல், மாநில வேலை உறுதி கண்காணிப்பு அமைப்பு ஏற்படுத்தல் போன்ற சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

1.4.2008 முதல் இந்த திட்டம் தமிழ்நாட்டில் அனைத்து ஊரக மாவட்டங்களிலும் வெற்றிகரமாக செயல்படுத்தப்படுகிறது என்றும், நாட்டின் இதர சில பகுதிகளில் இத்திட்டத்தின் நிறைவேற்றம் குறித்து எழுப்பப்படும் விமர்ச்சனங்கள் தமிழகத்தில் தவிர்க்கப்பட்டுள்ளன என்றும், தமிழ்நாடு இத்திட்ட செயலாக்கத்தை பொறுத்து முன்னோடி மாநிலமாக விளங்குகிறது என்று பாராளுமன்ற உறுப்பினர் திரு.ஈ.ஜி.சுகவனம் அவர்கள் தெரிவித்தார்.

குறைந்தபட்ச ஊதியமான ரூ.80 சில ஊர்களில் வழங்கப்படுவதில்லை என்ற குறை தெரிவிக்கப்படுகிறது இதனை நிவர்த்தி செய்ய வேண்டும் என்று பராளுமன்ற உறுப்பினர் திரு.பொ.மோகன் கேட்டுக் கொண்டார். இத்தகைய குறைப்பாடுகள் குறித்து வரப்பெறும் தகவல்கள் உடனுக்குடன் ஆய்வு செய்யப்படுகின்றன என்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.